சுருக்கம்

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை – வேலைவாய்ப்புப் பிரிவு – வேலைவாய்ப்பு அலுவலகம் வாயிலாக அனுப்பப்படும் பரிந்துரை பட்டியல்கள் – பட்டியலின் செல்லுபடி காலம் நீட்டிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ட்டி.2) துறை

அரசாணை (நிலை) எண். 190

நாள்: 10.10.2019,
விகாரி வருடம், புரட்டாசி–23,
திருவள்ளுவர் ஆண்டு 2050.

படிக்கவும்:–

1. அரசாணை (நிலை) எண்.6, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.1996.
2. ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிதுறை, சென்னை அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடித எண். ப.ப.1/14071/2019, நாள்:24.07.2019.

-------

ஆணை :

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட ஆணையில், வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து அனுப்பப்படும் பரிந்துரை பட்டியலின் செல்லுபடி காலமான ஆறு மாத காலத்திலிருந்து, மேலும் ஆறு மாத காலத்திற்கு நீட்டித்து வழங்குவதற்கு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை தலைமைக்கு அதிகாரம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே பார்வை இரண்டில் படிக்கப்பட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிதுறை ஆணையர் தனது 24.07.2019–ம் நாளிட்ட கடிதத்தில், வேலைவாய்ப்பு அலுவலகங்களைப் பொறுத்தவரை அரசு துறையில் தற்காலிக பணியிடங்கள் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்கு உட்படாத பணிக்காலியிடங்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நடைமுறை விதிமுறைகளுக்கு உட்பட்டு 1:5 என்ற விகிதத்தில் பரிந்துரை பட்டியல் வேலையளிப்போருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது என்றும், அவ்வாறு அனுப்பி வைக்கப்படும் பரிந்துரைப் பட்டியல்கள், அனுப்பி வைக்கப்படும் தேதியிலிருந்து ஆறு மாத காலத்திற்கு மட்டுமே செல்லுபடி காலமாக கருதப்படுகிறது என்றும், அரசு கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களுக்கு ஆசிரியர் பணியிடம் தொடர்பாக வழங்கப்படும் பட்டியல்களின் செல்லுபடி காலம், பட்டியல் அனுப்பப்படும் தேதியிலிருந்து ஓராண்டு காலமாகும் என்றும், இக்காலத்திற்கு பிறகு இப்பட்டியல்களின் மூலம் செய்யப்படும் நியமனம் சட்டப்படி செல்லுபடி ஆகாத முறையற்ற நியமனம் ஆகும் என்றும் தெரிவித்துள்ளார்.

(த.பி.பா)

Scanned by CamScanner

3. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.6, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.1996–ல், வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து அனுப்பப்படும் பரிந்துரை பட்டியலின் செல்லுபடி காலமான ஆறு மாத காலத்திற்கு மேல், பின்வரும் காரணங்களுக்காக மட்டுமே, மேலும் ஆறு மாத காலத்திற்கு நீட்டித்து வழங்குவதற்கு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை தலைமைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்:-

a) Selection Committee, if there is one, could not meet.

b) Matter is pending with Government for a decision / clarification.

c) Matter is pending with Court of Law.

4. தற்போது, சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண்.44, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 11.03.2015–ன் படி, வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் நிரப்பப்படும் பணிக்காலியிடங்களுக்கு, வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பெறப்படும் பரிந்துரை பட்டியல்கள் மட்டுமல்லாமல், வட்டார மொழியில் குறைந்தபட்சம் இரண்டு தினசரிகளில் பணிக்காலியிடம் குறித்து விளம்பரப்படுத்தி, அதனடிப்படையில் பெறப்படும் விண்ணப்பங்களையும் (வேலைவாய்ப்பு அலுவலக பட்டியலுடன்) இணைத்து வேலையளிப்போர் பரிசீலனை செய்து பணி நியமனம் செய்ய ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது என்றும், அவ்வாறு பணிக்காலியிடங்கள் தினசரிகளில் விளம்பரப்படுத்தப்படும் பொழுது பணிக்காலியிடம் உள்ள இடம் (Place of Work) மட்டுமல்லாது, மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலிருந்தும் அதிக அளவில் வேலையளிப்போருக்கு விண்ணப்பங்கள் பெறப்படும் சூழ்நிலை உள்ளதாக தெரிவித்துள்ளார்.

5. மேலும், ஒவ்வொரு பணிக்காலியிடத்திற்கும் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்படுவதன் வாயிலாக அதிக அளவில் நேரடியாக விண்ணப்பங்கள் பெறப்படுவதால் அனைத்தையும் பரிசீலித்து தேர்வு செய்வதில் வேலையளிப்பவர்களுக்கு கால அவகாசம் அதிகம் தேவைப்படுகிறது எனவும், பெரும்பாலான நேர்வுகளில் வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பட்டியலின் செல்லுபடி காலமாகிய ஆறுமாதம் / ஓராண்டு (பட்டியலின் நேர்விற்கேற்ப) காலத்திற்குள் தேர்வு பணிகளை முடிக்க இயலாத நிலை உள்ளது என அறியப்படுகிறது என்றும், இதனால் செல்லுபடி காலத்தினை நீட்டித்து தர வேலையளிப்போரிடமிருந்து பல கோரிக்கைகள் பெறப்பட்டுவருவதாகவும் தெரிவித்துள்ளார்.

6. மேற்குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையிலும், அரசாணை (நிலை) எண்.44, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 11.03.2015–ன் படி செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்தி அதன் அடிப்படையில் பெறப்படும் விண்ணப்பங்களையும் சேர்த்து பரிசீலனை செய்து வேலையளிப்போரால் பணிநியமனம் செய்யப்படுவதற்கு கூடுதல் கால அவகாசம் தேவைப்படுவதாலும், ஏற்கனவே ஆறு மாதம் என்று இருப்பதை ஓராண்டு காலாமாக நீட்டித்து உரிய ஆணைகள் வழங்குமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

Scanned by CamScanner

7. மேற்காணும் சூழ்நிலையில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அரசாணை (நிலை) எண்.6, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.1996–ல் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரை பட்டியலின் செல்லுபடி காலம் முடிவடையும் தேதியிலிருந்து நீட்டிப்பு வழங்க வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை ஆணையருக்கு உள்ள அதிகாரம் ஆறு மாதம் என்று இருப்பதை ஓராண்டு காலமாக நீட்டித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர்,
கிண்டி, சென்னை–600 032.
இருப்புக் கோப்பு / உதிரி நகல் (கோ.எண்.14356/ட்டி.1/2019)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

11/10/19

பிரிவு அலுவலர்

11/10/2019

Scanned by CamScanner